# நாளும் ஒரு திருமுறை

# THIRUMURAI A DAY

திருச்சிற்றம்பலம்

## திருஞானசம்பந்தர் அற்புதம்




**சிறப்பு** : திருஞானசம்பந்தருக்கு இறைவன் முத்துக் குடையும், முத்துச்சிவிகையும் அளித்த தலம். நிவா நதிக்கரையில் அமைந்துள்ளது. மூலவர் சுயம்பு. நந்தியின் தலை திரும்பியிருக்கும். இத்தலத்துக்கு அருகில் (1கி.மீ) மாறன்பாடி என்ற ஊர் உள்ளது. திருஞானசம்பந்தர் இந்தத் தலத்தில் இரவு தங்கிவிட்டு மறுநாள் திருஅரத்துறை வந்தார். இங்கே ஒரு கோயிலும் உள்ளது.

**இறைவன்** : தீர்த்தபுரீஸ்வரர், அரத்துறைநாதர்

**இறைவி** : திரிபுரசுந்தரி, அரத்துறைநாயகி

**தலமரம்** : ஆலமரம்

**தீர்த்தம்** : நிவாநதி

# THIRUMURAI A DAY

பதிக வரலாறு :                                                  பண் : பியந்தைக்காந்தாரம்



திருமுதுகுன்று, திருப்பெண்ணாகடம் பணிந்து திருவரத் துறை வரும்போழ்து, (ஒவ்வொருகால் , தந்தையார் தோள் மேல் ஏறிவரும்) பிள்ளையார் பாததாமரை நோதலையும் நோக்காது பையநடந்தார். சிவனருளால், அரத்துறை அந்தணர் கண்டவாறு, ஞானவேந்தர் ஏற , முத்துச் சிவிகையும் , அவர்க்குநிழலிட முத்துக்குடையும், `தென்தமிழ் விளங்கவந்த திருக்கழுமலத்தான் வந்தான் ... வந்தான் ` என்று ஊத முத்துச் சின்னங்களும் இருந்தன. அன்பர் பலரொடும் சென்று அவற்றை ஆளுடைய பிள்ளையாரிடம் அரத்துறை அந்தணர் கொடுத்தனர். அவர் மன்றுளார் அருள் என்று வணங்கினார். ` எந்தையீசன் ` என எடுத்து ` இவ்வருள் வந்தவாறு மற்று எவ்வண்ணமோ ` என்று சிந்தைசெய்தருளியதே இத்திருப்பதிகம் .

**எந்தை யீசனெம் பெருமான் ஏறமர் கடவுளென் றேத்திச்**
**சிந்தை செய்பவர்க் கல்லாற் சென்றுகை கூடுவ தன்றால்**
**கந்த மாமல ருந்திக் கடும்புன னிவாமல்கு கரைமேல்**
**அந்தண் சோலை நெல்வாயில் அரத்துறை அடிகள்தம் அருளே.01**

பொழிப்புரை :

மணம் பொருந்திய மலர்களை உந்திக்கொண்டு பெருகிவரும் நீரை உடைய நிவாநதிக்கரைமேல் அழகிய குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த திருநெல்வாயில் அரத்துறை அடிகளின் திருவருள் , எம் தந்தை , ஈசன் , பெரியோன் , ஆனேற்றை ஏறிவருவோன்

என்று அவன் பெயர்களைப் பலமுறை சொல்லி ஏத்தி மனம் பொருந்தி வழிபடவல்லவர்கட்கு அல்லால் , ஏனையோர்க்குக் கைகூடாதது .

குறிப்புரை:

இத்திருப்பதிகம் முத்துச் சிவிகையில் ஏறுவதன் முன்னர், திருவருட் சிறப்புணர்த்தப் பாடியருளியது. அப்பொழுது ஆங்கு இருந்த அன்பர் அனைவர்க்கும் ஆண்டவன் திருவருளைப் பெறுவதற்கு வேண்டும் வழிபாட்டை வற்புறுத்துவதை ஒவ்வொரு பாடலிலும் உணரலாம். எட்டாவது திருப்பாட்டில் அருளைச் செயப் படுபொருளாகக் கொள்ளல்வேண்டும். ஏனைய ஒன்பது பாக்களிலும் அருள் எழுவாயாக நிற்றலறிக. ஈற்றுப்பாட்டில், அருளைச்சொன்ன பாடல் என்றதுணர்க. எந்தை, ஈசன், எம் பெருமான், ஏறமர்கடவுள் (தி .2 ப .92 பா .5) என்று எடுத்து வாக்கால் ஓதி மனத்தால் சிந்தித்து, ( காயத்தால் வழிபாடு ) செய்பவர்க்கே அடிகள் திருவருள் கைகூடுவது, சென்று - மலவழி மலநடை கொள்ளாது நீக்கி அருள் வழியில் அருணடை கொண்டு. நிவா :- ஆற்றின்பெயர். அரத்துறை :- அறத்துறை என்பதன் மரூஉ . அரன் துறை என்பது சிறவாது. (thevaaram.org)

திருச்சிற்றம்பலம்